## கொழும்பு பெரும்பாக கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்டம்- 2011

### 1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டம் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணியுள்ளதெனவும் நிதிசார் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமைக் கூற்றினை விளக்குகின்றன என்பதும்

(ஆ) எதன் பொருட்டு நிதி வழங்கப்பட்டதோ அதன் பொருட்டே அது பயன்படுத்தப்பட்டது என்பதும்

(இ) 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கடடுநிதி நிதியக் கணக்கிலிருந்து பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீளளிப்புக்கள் என்பன செயற்திட்டம் பேணியுள்ள ஏடுகளிலும் பதிவேடுகளிலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிக்கொணரப்பட்டுள்ளன என்பதும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்தினத்தில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாகக் கணக்கிணக்கஞ் செய்யப்பட்டுள்ளன என்பதும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்தஞ் செய்வதற்கு முகாமைத்துவம் திருப்பதிகரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும்

(ஊ) கடன் உடன்படிக்கையில் விதித்துரைக்கப்பட்ட நிதியளிப்புக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியுள்ளன என்பதும்

எனது அபிப்பிராயமாகும்.

## 2 நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா. 156,106,867 ஆகவும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 168,228,162 ஆகவும் காணப்பட்டது. மீளாய்வாண்டிற்கான செலவினம், 2010 ஏப்ரல் 09 முதல் திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டுக் காலத்திற்கான செலவினம் மற்றும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினத்தின் பொழிப்பை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| செலவின விடயம் | 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | 2010 ஏப்ரல் 09 முதல் திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டுக் காலத்திற்கான செலவினம் | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| இயந்திரங்களும் உபகரணங்களும் | 5,914,686 | 2,924,579 | 8,839,265 |
| சமூக ஒன்றுபடுத்தல் | 805,120 | - | 805,120 |
| ஆலோசனைச் சேவைக் கட்டணங்கள் | 122,271,042 | - | 122,271,042 |
| அதிகரிக்கும் கிரயம் | 13,359,051 | 2,443,185 | 15,802,236 |
| அமுலாக்கலின் போதான நிதியளிப்புக் கட்டணங்கள் | 13,756,968 | 6,753,531 | 20,510,499 |
| மொத்தம் | 156,106,867 | 12,121,295 | 168,228,162 |

## 2.2 கட்டுநிதி நிதியக் கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தவல்களின்படி, விசேட செயற்பாடுகள் மற்றும் சாதாரண செயற்பாடுகளுக்காக இரண்டு வெவ்வேறான கட்டு நிதியக் கணக்குகள் திறக்கப்பட்டிருந்தன. 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலத்தின் போதான கட்டுநிதி நிதியக் கணக்கின் செயற்பாடுகள் மற்றும் அத்திகதியில் உள்ளவாறான அக் கணக்கில் இருந்த மீதி என்பவற்றின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

**(அ) ஏடிபீ கடன் இல. 2557 – எஸ்ஆர்ஐ எஸ்எல் 140 (சாதாரண செயற்பாடுகள்)**

| | யூ.எல். டொலர் | ரூபா |
|---|---:|---:|
| ஆரம்ப வைப்பு | 200,000 | 22,038,620 |
| கூட்டு:- | | |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | - | 741,640 |
| 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 200,000 | 22,780,260 |

**(ஆ) ஏடிபீ கடன் இல. 2558 – எஸ்ஆர்ஜ எஸ்எல் 141 (விசேட செயற்பாடுகள்)**

| | யூ.எஸ். டொலர் | ரூபா |
|---|---|---|
| 2011 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 112,086 | 12,436,241 |
| கூட்டு:- | | |
| மீள் நிரப்பல்கள் | 176,115 | 19,762,790 |
| | 288,201 | 32,199,031 |
| கழி:- | | |
| பற்றுதல்கள் | 259,948 | 28,926,171 |
| வெளிநாட்டு நாணயமாற்று நட்டம் | - | 54,764 |
| 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 28,253 | 3,218,096 |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செயற்திட்டத்தின் விபரமான வேலைத் திட்டங்களின் பிரகாரம் 2012 இன் 3 ஆவது காலாண்டிலிருந்து ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவு தொகையாகவிருந்த சாதாரண மூலதன வளங்களின் பட்டியல்படுத்திய நிதிகள் பயன்படுத்தக் கூடியதாக இருந்த போதிலும் ரூபா 13,231,458 தொகையான கடப்பாட்டுக் கட்டணங்கள் 3 ஆவது காலாண்டு ஆரம்பிப்பதற்கு முன்னர் 2010 ஆகஸ்ட் 15 தொடக்கம் 2011 ஆகஸ்ட் 14 வரை செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) செயற்திட்டத்தின் 05 கூறுகளிற்காக 2011 ஆம் ஆண்டின் பாதீட்டில் ரூபா 735 மில்லியன் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 207 மில்லியன் அதாவது ஏற்பாட்டில் 28% மாத்திரம் மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்தது. ஏற்பாடுகளுடன் ஒப்பிடப்பட்டு நிதி குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களில் சில கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | விடயம் | ஒதுக்கப்பட்ட தொகை | 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு உள்ளவாறான செலவினம் | குறைவாகப் பயன்படுத்தப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| **(1)** | **சாக்கடை கழிவு நீர் உட்கட்டமைப்பு தரமேம்படுத்தல்** | | | |
| 1.1 | பொருத்தப்படாத உபகரணங்களை சீஎம்சீ இற்கு வழங்குதல் (ஜெட்டிங் இயந்திரங்கள்) | 260 | 0.78 | 259 |
| 1.2 | கடற்கரையோரங்களை புனரமைத்தல் | 249 | இல்லை | 249 |
| 1.3 | மீளக் குடியமர்த்தல் செயற்பாடுகள் | 02 | 0.805 | 1.195 |
| **(2)** | **நிறுவன ரீதியான செயற்பாட்டு இயலளவை பலப்படுத்துதல்** | | | |
| 2.2 | நிறுவன ரீதியான உதவிக்கான உபகரணங்கள் | 03 | இல்லை | 03 |
| 2.3 | இயலளவு அபிவிருத்தி | 05 | இல்லை | 05 |
| **(3)** | **செயற்திட்ட முகாமையும் அமுல்படுத்தலுக்கான உதவியும்** | | | |
| | பயிற்சியும் செயலமர்வும் | 01 | இல்லை | 01 |

(இ) ரூபா 14,440,851 பெறுமதியான நிலையான சொத்துக்களுக்காக நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் ஆண்டின் இறுதியில் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தீர்மானிக்கப்பட்ட செயற்திட்டக் காலப்பகுதியில் செயற்திட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக ஒட்டுமொத்த செயற்திட்டக் காலப்பகுதியை உள்ளடக்கிய வகையில் இலக்குகளுக்கான பொறுப்புக்கள் குறிப்பிடப்பட்டு மாதாந்த, காலாண்டு மற்றும் அரையாண்டு ரீதியாக நிதி மற்றும் பௌதீக இலக்குகளைக் காண்பிக்கும் விபரமான செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று செயற்திட்ட செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் தயாரிக்கப்பட வேண்டும். எனினும் அவ்வாறான திட்டம் 2012 யூலை 09 வரை தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.